# சுங்கான்கடையில் கலை போட்டி : மார்த்தாண்டம் கல்லூரி சாதனை



மார்த்தாண்டம், அக். 13–

சுங்கான்கடை கல்லூரியில் நடந்த கலைப் போட்டியில் மார்த்தாண்டம் தேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி மாணவ, மாணவிகள் சாதனை படைத்தனர். சுங்கான்கடை தூய சவேரியார் இன்ஜினியரிங் கல்லூரியில் கல்லூரிகளுக்கு இடையிலான கலை போட்டிகள் நடந்தது. இதில், மார்த்தாண்டம் தேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி இளைஞர் நலத்துறை மற்றும் கவின் கலை மன்ற மாணவர்கள் பங்கேற்றனர். போட்டிகளில் மாணவர்கள் ஆகாஷ், ரெவின்டா ஆகியோர் அதிக புள்ளிகள் பெற்று ஆறுதல் கோப்பையை பெற்றனர். வெற்றிபெற்ற மாணவர்களை முதல்வர் டாக்டர் பால்ராஜ், தாளாளர் ஜெயசந்திரன், ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பெட்ஸின் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.